| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பெண்களை இஸ்லாமிய ஹிஜாப் அணியுமாறு பணித்தல், அவர்களுடன் குலைந்து பேசுவதை .தவிர்த்தல் மேலும் அவர்களுடன் தனிமையில் உறவாடுவது,கைலாகு கொடுப்பது, ஒன்றென கலந்திருப்பதை தவிர்த்தல். | .பார்வையை தாழ்த்தி பெண்கள் காணப்படும் மார்க்கெட்டுகள் போன்ற இடங்களில் இருந்து தூரமாக இருத்தல். அன்னிய பெண்களுடன் தனிமையில் இருப்பதை தவிர்த்தல். | பாலுணர்வை பலவீனப்படுத்த உண்ணல் பருகல் ஆகியவற்றை குறைத்தல் | வசதி வாய்ப்புகள் இருப்பின் திருமணத்தை தீவிரப் படுத்தல். முடியாவிடின் நோன்பு நோற்றுக் .கொள்ளுதல் நபி (ஸல்)கூறினார்கள்: நிச்சயமாக நோன்பு கேடயமாகும். (நூல் புகாரி முஸ்லிம்) | இச்சைகளை தூண்டும் பேச்சுகளை தவிர்த்தல். சபைகளில் இத்தகைய உணர்வைத் தூண்டும் சொல், செயல்களை தவிர்த்தல். | அல்லாஹ்வுக்காக ஒன்றை விடுவதால் அல்லாஹ் அதற்கு பதிலான ஒன்றை தருவான் எனும் எண்ணத்தை வரவழைத்துக் கொள்ளல். நபி (ஸல் ) கூறினார்கள்: மனிதா! நீ ஒன்றை அல்லாஹ்வுக்காக விட்டால் அதைவிட சிறந்த ஒன்றை அல்லாஹ் உனக்கு தராமல் விடமாட்டான். (நூல் அஹ்மத்) . | தக்கவாவை கடைப்பிடித்து அதிகம் துஆவில் ஈடுபடல். நபி யூசுப் (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் இப்படி பிரார்த்தித்தார்கள்: என் இறைவா பெண்களின் சூழ்ச்சியிலிருந்து என்னை நீ காப்பாற்றவில்லை என்றால் நான் அவர்களின் பக்கம் சாய்ந்து விடுவேன். ( யூசுப்: 33). |
| **(7)** | **(6)** | **(5)** | **(4)** | **(3)** | **(2)** | **(1)** |
| **விபச்சாரம், ஓரினச்சேர்க்கையிருந்து விலகி இருக்க இஸ்லாம் கூறும் மிக முக்கிய வழிகள்.** | | | | | | |
| **(14)** | **(13)** | **(12)** | **(11)** | **(10)** | **(9)** | **(8)** |
| நன்மையை ஏவி தீமையை தடுக்கும் பணியை கவனமாக பேணி வரல். அதில் குறைந்த பட்சம் உள்ளத்தால் வெறுத்தேனும் பாவத்தை குறைத்தல். அவ்வாறு செய்யும்போது உள்ளம் உயிர்பிக்கப்பட்டு நன்மையின் பக்கம் ஆசை கொள்ளும். | தொலைபேசி, கனணி போன்றவற்றை ஏனையோர் காணும் விதமாக பகிரங்கமான இடத்தில் வைப்பது பயன்படுத்துவது. காரணம் மனிதன் தனிமையில் இருக்கும்போதே பலவீனம் அடைகின்றான். | இச்சைகளை தூண்டும் தொடர்பு சாதனங்களை தவிர்த்தல், குறிப்பாக இன்று காணப்படும் எலக்ட்ரானிக் சாதனங்கள் அதில் பயன்படுத்தப்படும் செயலிகள் பயன்பாடை தவிர்த்தல். | ஓய்வை தவிர்த்து அதிகம் உள்ளத்தை நன்மையான விடையங்களில் ஈடுபடுத்தல். ஓய்வென்பது மனிதனை கொல்லும் ஒன்றாகும், தனிமையில் இருக்கும் போதே மனசும் ஷைத்தானும் பாவத்தை தூண்டுகின்றனர். | (நீ நடப்பது போலவே நடாத்தப்படுவாய்) எனும் விதியை எண்ணிப்பார்க்கவேண்டும். விபச்சாரம் தீர்க்கப்படவேண்டிய கடன் போன்றதே. விபச்சாரம் செய்பவர் அதனாலேயே சோதிக்கப்படுவார். | நன்மையை ஏவி தீமையை தடுக்கும் நல்லோர்களுடன் தோழமை கொண்டு வெறுக்கத்தக்க காரியங்களின் பக்கம் தூண்டும் தீய நட்புகளை தவிர்ந்து வாழுதல். | சூரா யூசுப் போன்ற படிப்பினைக்குரிய சூராக்களை படிப்பதும் சிந்திப்பதும். அவ்வாறே குர்ஆன் சுன்னாவில் இடம் பெற்றுள்ள வரலாற்று சம்பவங்கள், முன் சென்ற நல்லோர்களின் வரலாறு ஆகியவற்றை படித்தல். |